



# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**மானியக் கோரிக்கை எண் - 26**

## அறிவிப்புகள்
## 2024-2025

# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**மானியக் கோரிக்கை எண் - 26**

## அறிவிப்புகள்
## 2024-2025


**சு. முத்துசாமி**
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற
வளர்ச்சித் துறை அமைச்சர்


Verified RealEstate™

# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், வழிகாட்டுதலின்படியும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில் 11 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**சு. முத்துசாமி**

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற**
**வளர்ச்சித் துறை அமைச்சர்**

Verified RealEstate™

1. நகர் ஊரமைப்பு இயக்ககத்தை மதிப்பீடு செய்து வலுப்படுத்தவும், நகர்ப்புற வளர்ச்சி குழுமங்கள் சிறப்பாக செயல்படுவதற்கு முழுமையான நிருவாக அமைப்பை ஏற்படுத்தவும், பொது மக்களுக்கு எளிய முறையில் சேவைகளை வழங்கிட தொலைநோக்கு செயல்திட்டத்தை உருவாக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்.

நகர் ஊரமைப்பு இயக்ககத்தை மறுசீரமைத்து வலுப்படுத்தவும் நகர்ப்புற வளர்ச்சி குழுமங்கள் சிறப்பாக செயல்படுவதற்கு முழுமையான நிருவாக அமைப்பை ஏற்படுத்தி, பொது மக்களுக்கு எளிய முறையில் சேவைகளை வழங்கிட தொலைநோக்கு செயல் திட்டம் உருவாக்கப்படும்.

## 2. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளை புவியியல் தகவல் முறையில் புவிசார் கூறுகளைக் கொண்டு மக்கள் பயன்பாட்டிற்கான இணைய செயலி உருவாக்கப்படும்.

ஒற்றைச் சாளர முறையின் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் புவிசார் தகவல் முறையுடன் ஒருங்கிணைத்து புவிசார் கூறுகளுடன் இணைய செயலி உருவாக்கப்படும். இது மக்கள் ஒப்புதல் விபரம், புல எண், சாலைகள், மனைகளின் பரப்பளவு, வழிகாட்டி மதிப்பு போன்ற மனைப்பிரிவு தொடர்பான தகவல்களை பெற பயன்படும்.



## 3. தமிழ்நாட்டில் ஏதேனும் ஒரு நகரில் உள்ளூர் திட்டப் பகுதிக்கான நிலச்சேர்ம பகுதி வளர்ச்சித் திட்டம் (Land Pooling Area Development Scheme) செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் தற்பொழுது முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டு வரும் ஏதேனும் ஒரு நகரில் முன்மாதிரியாக, நிலச்சேர்ம பகுதி வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்படும். இத்திட்டம் திட்டமிட்ட மற்றும் முறையான வளர்ச்சியை உறுதி செய்யும் விதத்தில், தனிநபர்களிடமிருந்து நிலங்களை ஒருங்கிணைத்து ஒவ்வொரு மனைக்கும் சாலை வசதியை ஏற்படுத்துவதுடன் பொது உள்கட்டமைப்பு வசதிக்காகவும் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**4. முழுமைத் திட்ட நிலஉபயோக வகைப்பாடுகளை பொதுமக்கள் அறிந்துக்கொள்ள "நிலப்பயன் தகவல் அமைப்பு" (Land Use Information System) உருவாக்கப்படும்.**

முழுமைத் திட்ட நிலஉபயோக வகைப்பாடுகளை பொதுமக்கள் அறிந்துக்கொள்ள "நிலப்பயன் தகவல் அமைப்பு" தளம் உருவாக்கப்படும். இம்மதிப்புமிக்க தகவல்கள் நிதி முதலீடு, குடியிருப்பு, வணிகம், தொழில் மற்றும் விவசாய நிலம் சார்ந்த தொழில் முதலீடுகளை அதிகரிக்க வழிவகை செய்யும்.



**5. 300 சதுர மீட்டருக்குள் கட்டட பரப்பளவு கொண்ட, 14 மீ உயரத்திற்குள் உள்ள அனைத்து வணிகக் கட்டடங்களுக்கும் கட்டட முடிவு சான்று பெறுவதிலிருந்து விலக்களித்தல்.**

சிறு வணிகர்கள் பயன்பெறும் வகையில் 300 சதுர மீட்டர் மொத்த கட்டட பரப்பளவிற்குள், 14 மீட்டர் உயரத்திற்குள் அமையும் வணிகக் கட்டடங்களுக்கு, கட்டட முடிவுச் சான்றிதழ் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்படும்.

## 6. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், ஈரோடு மாவட்டம், சம்பத் நகரில், 108 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படும்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், ஈரோடு மாவட்டம், சம்பத் நகர் திட்டப் பகுதியில், பொது மற்றும் தனியார் பங்களிப்புடன், 3.741 ஏக்கர் நிலப் பரப்பில் வணிக வளாகம் மற்றும் நவீன வசதிகள் கொண்ட 108 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படும்.



## 7. திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள 2 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு சொந்தமான நிலங்களில் எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் (பெட்ரோல் பங்க்) ரூ.130.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள சி.1603, திருவண்ணாமலை கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள ஏ 1929 திருநகர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் ஆகிய 2 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு சொந்தமான நிலங்களில் எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் (பெட்ரோல் பங்க்) ரூ.130.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.



Verified RedIE™

**8. சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களிலுள்ள 10 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் ரூ.57.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பாதுகாப்பு அறையுடன் கூடிய இரும்பு பெட்டகங்கள் அமைக்கப்படும்.**

சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களிலுள்ள, 10 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில், ரூ.57.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், நகைக்கடன் வழங்குவதற்கு ஏதுவாக பாதுகாப்பு அறையுடன் கூடிய இரும்பு பெட்டகங்கள் அமைக்கப்படும்.



**9. செங்கல்பட்டு மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள 2 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்குச் சொந்தமான நிலத்தில் ரூ. 70.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் வணிக வளாகங்கள் கட்டப்படும்.**

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள, செங்கல்பட்டு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள ஏ 1929 திருநகர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் ஆகிய இரண்டு கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்குச் சொந்தமான நிலத்தில் ரூ.70.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் வணிக வளாகங்கள் கட்டப்படும்.



Verified RedEs

## 10. சென்னைப் பெருநகரப் பகுதிக்கு புதிய வாகன நிறுத்தக் கொள்கை உருவாக்கப்படும்.

சென்னைப் பெருநகர பகுதியில் பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கையையும் அதன்பால் ஏற்படும் வாகன நிறுத்த தேவையை அறிந்து திறம்பட மேலாண்மை செய்திட புதிய வாகன நிறுத்தக் கொள்கை உருவாக்கப்படும்.



## 11. மாநிலத்தின் போக்குவரத்து திட்டமிடல் திறனை மேம்படுத்தும் வகையில் அண்ணா பல்கலைக் கழகத்தில் புதிய பாடப்பிரிவாக போக்குவரத்து திட்டமிடல் பட்டமேற்படிப்பு (M.Plan) அறிமுகப்படுத்தப்படும்.

அண்ணா பல்கலைக் கழகத்தின் கட்டடக்கலை மற்றும் திட்டமிடல் பள்ளியில் (School of Architecture and Planning) போக்குவரத்து திட்டமிடல் பட்டமேற்படிப்பு (M.Plan - Transportation Planning) அறிமுகப்படுத்தப்படும்.